RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING — மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 131 | மே.17, 2025 சனிக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5



## “2026 மட்டுமல்ல... 2031, 2036ம் ஆண்டிலும் திமுக ஆட்சிதான்!” முதல்வர் ஸ்டாலின் நம்பிக்கை

உதகை: மே.17-

“வரும் 2026 மட்டுமல்ல, 2031, 2036ம் ஆண்டிலும் தமிழகத்தில் திமுகதான் ஆட்சி அமைக்கும்” என முதல்வர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உதகையில் முதல்வர் ஸ்டாலின் நடைபயிற்சி மேற்கொண்டார். அதன் பிறகு பத்திரிகையாளர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறும்போது, “உதகை பயணம் சிறப்பாக அமைந்துள்ளது. மக்களை சந்தித்துப் பேச முடிந்தது. அவர்களது கருத்தையும் அறிந்துகொள்ள முடிந்தது. நீலகிரி மாவட்டம் மட்டுமல்லாது, சுற்றுலா நிமித்தமாக வந்த மக்களின் கருத்தையும் அறிய முடிந்தது.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விளக்கம் கோரி உச்ச நீதிமன்றத்துக்கு கடிதம் அனுப்பியுள்ளார். அந்த விவகாரம் தொடர்பாக பிற மாநில முதல்வர்களுடன் பேசி, அவர்கள் தெரிவிக்கும் கருத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும். வரும் 2026 தேர்தல் மட்டுமல்ல, 2031, 2036 தேர்தலிலும் தமிழகத்தில் திமுகதான் ஆட்சி அமைக்கும்” என்றார்.

## ‘2026 தேர்தலில் கூட்டணி உறுதி; ஒருவேளை தனித்து போட்டியிட்டால்...’ ராமதாஸின் வியூகம்



விழுப்புரம்: மே.17-

வரும் 2026ம் ஆண்டு சட்டப்பேரவைத் தேர்தலில் கூட்டணி நிச்சயம். இருப்பினும் தனித்துப் போட்டியிட்டாலும் குறைந்தது 40 தொகுதிகளிலாவது பாமக வெற்றி பெற வேண்டும் என அக்கட்சியின் நிறுவனர் ராமதாஸ் கூறியுள்ளார்.

பாமக நிறுவனர் ராமதாஸ் தலைமையில் தைலாபுரத்தில் அக்கட்சியின் மாவட்டத் தலைவர்கள், செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. ஆனால் இக்கூட்டத்தில் பாமக தலைவர் அன்புமணி கலந்துகொள்ளவில்லை. இதனையடுத்து பெரும்பாலான பாமக நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இந்த கூட்டத்தையொட்டி செய்தியாளர்களிடம் பேசிய ராமதாஸ், “50 தொகுதிகளில் வெற்றி பெறுவதற்கான ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்வதற்கான கூட்டம் இது. வரும் 2026ம் ஆண்டு சட்டசபை தேர்தலில் கூட்டணி நிச்சயம். இருப்பினும் தனித்து போட்டியிட்டாலும் குறைந்தது 40 தொகுதிகளிலாவது பாமக வெற்றி பெற வேண்டும்.

மாநாட்டுப் பணிகளால் களைப்போடு இருப்பதால் சிலர் கூட்டத்துக்கு வரவில்லை. சிலர் என்னை தொலைபேசியில் அழைத்து காரணம் சொன்னார்கள். கூட்டத்தை புறக்கணித்தவர்கள் மீது நடவடிக்கை தேவையில்லை. செயல்பட முடியவில்லை என்று யாரும் விருப்பம் தெரிவித்தால் விரும்பியபடி மாற்றப்படுவார்கள்.

பாமகவில் கோஷ்டி மோதல் இல்லை. கூட்டத்தில் பங்கேற்க செயல் தலைவர் அன்புமணிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. அன்புமணி வரலாம், வந்து கொண்டிருக்கலாம். சிங்கத்தின் கால்கள் பழுதாகாதபோது சீற்றம் இன்னும் அதிகமாகத் தானே இருக்கும். ஆட்சியைப் பிடிக்க வேண்டுமென்ற அந்த சீற்றம், எண்ணம் அதிகமாகிக் கொண்டே இருக்கிறது. பாமகவில் நானே ராஜா.” என்று கூறினார்.

## டாஸ்மாக் விவகாரத்தில் முற்றும் நெருக்கடி: சென்னையில் 10 இடங்களில் அமலாக்கத்துறை சோதனை

சென்னை: மே.17-

சென்னையில் டாஸ்மாக் நிறுவன அதிகாரிகளின் வீடுகளில் அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர். டாஸ்மாக் முறைகேடு வழக்கு தொடர்பாக சென்னையில் 10க்கும் மேற்பட்ட இடங்களில் சோதனை நடைபெற்று வருகிறது.



மணப்பாக்கம் சி.ஆர்.புரத்தில் உள்ள டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் விசாகன் இல்லத்தில் அமலாக்கத்துறை சோதனை நடத்தி வருகிறது. மேலும், சூளைமேடு பகுதியில் இருக்கும் எஸ்.என்.ஜே நிறுவனம், தேனாம்பேட்டையில் உள்ள திரைப்பட தயாரிப்பாளர் ஆகாஷ் பாஸ்கரன் வீடு மற்றும் திருவல்லிக்கேணியில் தொழிலதிபர் தேவக்குமார் இல்லத்திலும் அமலாக்கத் துறையினர் சோதனை நடத்தி வருகின்றனர்.

டாஸ்மாக் தலைமை அலுவலகத்தில் கடந்த 6ம் தேதி முதல் 8ம் தேதி வரை சோதனை நடத்திய அமலாக்கத் துறை, டாஸ்மாக் நிறுவனத்துக்கு மதுபானங்கள் கொள்முதல் செய்தது, பார் உரிமம் வழங்கியது, மதுபானங்களை மதுபானக் கடைகளுக்கு கொண்டு செல்வதற்கான போக்குவரத்துக்கு டெண்டர் வழங்கியது உள்ளிட்டவற்றில் ரூ.1,000 கோடி முறைகேடு நடந்துள்ளதாக அறிக்கை வெளியிட்டது.

இந்த சோதனையை சட்டவிரோதமானது என அறிவிக்க கோரி டாஸ்மாக் நிர்வாக இயக்குநர் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தார். இந்த மனுவை தள்ளுபடி செய்த உயர் நீதிமன்றம், அமலாக்கத் துறை தொடர்ந்து விசாரணை நடத்த முழு அனுமதி அளித்து உத்தரவிட்டது. இதனையடுத்து, இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

## பொதுத் தேர்வு முடிவுகள் வெளியீடு: 10ம் வகுப்பில் 93.80%, 11ம் வகுப்பில் 92.09% மாணவர்கள் தேர்ச்சி

சென்னை, மே.17-

தமிழகத்தில் நடந்து முடிந்த 10ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளை சென்னையில் பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் வெளியிட்டார்.

அதன்படி, 10ம் வகுப்பில் ஒட்டுமொத்தமாக 93.80% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில், மாணவியர் 95.88 சதவீதமும், மாணவர்கள் 91.74 சதவீதமும் தேர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டைவிட மொத்த தேர்ச்சி விகிதம் 2.25% அதிகரித்துள்ளது. இருப்பினும், வழக்கம்போல் இந்த ஆண்டும் மாணவர்களைவிட மாணவியர் 4.14 சதவீதம் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்

தமிழக பள்ளிக்கல்வி பாடத் திட்டத்தில் 10, 11ம் வகுப்புக்கான பொதுத் தேர்வுகள் கடந்த மார்ச் 5 முதல் ஏப்ரல் 15ம் தேதி வரை நடைபெற்றன. இதில் 10ம் வகுப்பு தேர்வை சுமார் 9 லட்சம் பேரும், 11ம் வகுப்பு தேர்வை சுமார் 8 லட்சம் பேரும் எழுதினர். விடைத்தாள் திருத்தும் பணி ஏப்ரல் 21ல் தொடங்கி 30ம் தேதியுடன் முடிவடைந்தது. தேர்வு முடிவுகள் மே 19ம் தேதி வெளியிடப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், முன்கூட்டியே வெளியிட தேர்வுத் துறை முடிவு செய்தது.

அதன்படி, 10, 11ம் வகுப்பு தேர்வு முடிவுகளை சென்னையில் பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் நேற்று காலை 9 மணியளவில் வெளியிட்டார்.



10ம் வகுப்பில் ஒட்டுமொத்தமாக 93.80% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில், மாணவியர் 95.88 சதவீதமும், மாணவர்கள் 91.74 சதவீதமும் தேர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டைவிட மொத்த தேர்ச்சி விகிதம் 2.25% அதிகரித்துள்ளது. இருப்பினும், வழக்கம்போல் இந்த அண்டும் மாணவர்களைவிட மாணவியர் 4.14 சதவீதம் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்

முதல் 5 மாவட்டங்கள்: தேர்ச்சி விகிதத்தின்படி, சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருச்சி ஆகிய மாவட்டங்கள் முதல் ஐந்திடத்தில் உள்ளன. அரசுப் பள்ளிகளில் அதிக தேர்ச்சி விகிதம் பெற்ற முதல் ஐந்து மாவட்டங்களிலும் சிவகங்கை, விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருச்சி மாவட்டங்களே இடம்பெற்றுள்ளன.

பாடவாரியாக தேர்ச்சி விகிதம்:

தமிழ்: 98.09%
ஆங்கிலம்: 99.46%
கணிதம்: 96.57%
அறிவியல்: 97.90%
சமூக அறிவியல்: 98.49%

பாடவாரியாக சதம் அடித்தவர்கள் எண்ணிக்கை:

தமிழ்: 8
ஆங்கிலம்: 346
கணிதம்: 1996
அறிவியல்: 10838
சமூக அறிவியல்: 10256 பேர் 100க்கு 100 மதிப்பெண்கள் பெற்றுள்ளனர்.

அதேபோல், 10ம் வகுப்பு பொதுத்தேர்வெழுதிய 12,290 மாற்றுத் திறனாளி மாணவர்களில் 11,409 பேரும் (92.83%), சிறைவாசிகளில் 237 பேரில் 230 பேரும் (97.05%) பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாற்று பாலினத்தைச் சேர்ந்த ஒருவர் தேர்வெழுதினார், அவரும் வெற்றி பெற்றுள்ளார்.

11ம் வகுப்பில் மொத்தம், 92.09 சதவீதம் மாணவ மாணவியர் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாணவியர் 95.13 சதவீதமும், மாணவர்கள் 88.70 சதவீதமும் தேர்ச்சி அடைந்துள்ளனர். மாணவர்களைவிட மாணவியர் 6.43 சதவீதம் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேர்ச்சி விகிதத்தின்படி, அரியலூர், ஈரோடு, விருதுநகர், கோயம்புத்தூர், தூத்துக்குடி ஆகிய மாவட்டங்கள் முதல் ஐந்திடத்தில் உள்ளன. அரசுப் பள்ளிகளில் அதிக தேர்ச்சி விகிதம் பெற்ற முதல் ஐந்து மாவட்டங்களில் அரியலூர், ஈரோடு, நாகப்பட்டினம், விருதுநகர், சிவகங்கை மாவட்டங்கள் உள்ளன.

பாடப் பிரிவுகள் வாரியாக தேர்ச்சி விகிதம்:

அறிவியல் பாடப் பிரிவுகள்: 95.08%
வணிகவியல் பாடப் பிரிவுகள்: 87.33%
கலைப் பிரிவுகள்: 77.94%
தொழிற்பாடப் பிரிவுகள்: 78.31%

பாடவாரியாக சதம் அடித்தவர்கள் எண்ணிக்கை:

தமிழ் 41
ஆங்கிலம் 39
இயற்பியல் 390
வேதியியல் 593
உயிரியல் 91
கணிதம் 1338
தாவரவியல் 4
விலங்கியல் 2
கணினி அறிவியல் 3535
வரலாறு 35
வணிகவியல் 806
கணக்குப் பதிவியல் 111
பொருளியல் 254
கணினிப் பயன்பாடுகள் 761
வணிகக் கணிதம் மற்றும் புள்ளியியல் 117

## தமிழக அரசின் நடவடிக்கைகளால் பெண் காவலர்களின் வாழ்க்கையிலும் பணியிலும் மாற்றங்கள்

### உதயநிதி ஸ்டாலின் தகவல்

வண்டலூர்: மே.17-

தமிழக அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் காவல் துறையில் பணியாற்றும் பெண் காவலர்களின் பணியிலும், வாழ்க்கையிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதாக துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தெரிவித்தார்.

‘காவல் துறையில் பெண்கள்’ என்ற தலைப்பில் தமிழ்நாடு காவல்துறை மற்றும் காவல் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனம் இணைந்து 11வது தேசிய மாநாடு வண்டலூர் அருகே ஊனமாஞ்சேரியில் உள்ள தமிழ்நாடு போலீஸ் அகாடமியில் நேற்று முன்தினம் தொடங்கியது இரண்டு நாள்கள் நடைபெறும் இம்மாநாட்டை மத்திய உள் துறை இணை அமைச்சர் நித்தியானந்த் ராய் தொடங்கி வைத்தார். நேற்று நடைபெற்ற மாநாட்டு நிறைவு விழாவில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டார்.



அப்போது அவர் பேசியதாவது:பாரம்பரிய குடும்பப் பணியிலிருந்து பெண்கள் காவல் அதிகாரியாக மாறுவது நமது சமூகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும். 50 ஆண்டுகளுக்கு முன்பு 22 பெண்களுடன் தொடங்கிய மகளிர் காவல் பிரிவு, தற்போது 27,000 பெண் காவல் துறையினரின் ஒரு பெரிய படையாக வளர்ந்துள்ளது. இது நாட்டின் மிகப்பெரிய ஒன்றாகும். தமிழகத்தில், சட்டம் ஒழுங்கு, குற்றப் பிரிவு, போக்குவரத்து காவல் நிலையங்களில் 43 சதவீதம் பெண் காவல் அதிகாரிகள் பணியாற்றுகின்றனர். இது, மற்ற மாநிலங்களைவிட அதிகம்.

கடந்த 2023ம் ஆண்டில்பெண் காவல் துறைக்காக முதல்வர் அறிவித்த காலை ரோல்கால் நேரத்தை தளர்த்துவது. காவல் துறையில் பணியாற்றும் பெண்களுக்காக தனிப்பட்ட ஓய்வறைகள், தங்கும் வசதி, குழந்தை பராமரிப்பு மையம், சிறந்த செயல் திறனை கொண்ட பெண்கள் காவலர்களுக்கு விருதுகள், பெண்கள் மேற்கொள்ளும் குடும்பப் பொறுப்புகளை கருத்தில் கொண்டு இடமாற்றம், விடுப்புகள் மற்றும் பணிநியமனக் கொள்கைகள்.

பெண் காவலர்கள் மற்றும் பொதுமக்களுக்கு சுயபாதுகாப்பு பயிற்சி வழங்கும் ‘அவள்’ திட்டம். பதவி உயர்வுக்கான தயாரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் தொழில்முனைவோர் மேம்பாட்டு அமைப்புகள் மற்றும் வழிகாட்டிகள் அமைத்தல், அனைத்து பெண்கள் துப்பாக்கிச் சுடுதல் போட்டி மற்றும் திறன் மேம்பாட்டுக்கான கருத்தரங்குகள் நடத்துதல் ஆகிய அனைத்தும் காவல்துறையிலுள்ள பெண்கள் வாழ்க்கையிலும் பணியிலும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

துணை முதல்வர், அமைச்சர் தா.மோ.அன்பரசன் மற்றும் கூடுதல் தலைமைச்செயலர் ஆகியோருக்கு தமிழக காவல்துறை இயக்குநர் சங்கர் ஜிவால், நினைவு பரிசு வழங்கினார். காவல் துறை ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு துறையின் தலைமை இயக்குநருக்கு துணை முதல்வர் நினை வுப் பரிசை வழங்கினார்.

நிகழ்ச்சியில் குறு,சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தமிழக உள்துறை செயலாளர் தீரஜ்குமார், காவல் துறை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல் ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு பணியகத்தின் இயக்குநர் ராஜீவ் குமார் ஷர்மா, தமிழ்நாடு காவல் உயர்பயிற்சியகத்தின் இயக்குநர் டாக்டர் சந்தீப் ராய் ரத் தோர், தீயணைப்பு மற்றும் மீட்பு துறை டிஜிபி. சீமா அகர்வால், செங்கல்பட்டு ஆட்சியர் ச. அருண்ராஜ் உள்ளிட்ட பலர் பங் கேற்றனர்.

முன்னதாக மாநாடு குறித்த புத்தகத்தை துணை முதல்வர் முதல்வர் உதயநிதி வெளியிட்டார். நிறைவாக குழு புகைப்படம் எடுத்துகொண்டனர். முன்னதாக மாநாட்டில் காவல் துறையில் பெண்களுக்கு 30% இடஒதுக்கீடு, ஆண், பெண் அதிகாரிகளுக்கு சாத்தியமான முறையில் ஒரே நேரத்தில் பயிற்சி அளித்தல், அதிக எண்ணிக்கையில் பெண் கவாத்து பயிற்சியாளர்களை நியமித்தல், தாலுகா தலைமையகங்களில் 24ஜ்7 செயல்படும் முழுமையாக சீரமைக்கப்பட்ட குழந்தைகள் பராமரிப்பு மையங்கள் இருக்க வேண்டும் என்பன உட்பட 18 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## இந்தியாவில் பாக்., கொடி விற்பனை: ஆன்லைன் வணிக நிறுவனங்களுக்கு மத்திய அரசு நோட்டீஸ்

புதுடில்லி: மே.17-

நமது நாட்டில் ஆன்லைன் இணையதளம் மூலம் பாகிஸ்தான் தேசியக் கொடி, அந்நாட்டின் சின்னங்கள் உள்ளிட்டவற்றை விற்பனை செய்ததாக அமேசான், பிளிப்கார்ட் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு மத்திய அரசு நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலை தொடர்ந்து ‘ஆபரேஷன் சிந்தூர்’ மூலம் பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்படும் 9 பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தியது. இதனால், இரு நாடுகளுக்கு இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டு உள்ளது. இச்சூழ்நிலையில், ஆன்லைன் வர்த்தக நிறுவனங்கள் பாகிஸ்தான் கொடி மற்றும் சின்னங்களை இந்தியாவில் விற்பனை செய்வதாக மத்திய அமைச்சர்கள் பியூஷ் கோயல் மற்றும் பிரஹலாத் ஜோஷிக்கு அகில இந்திய வர்த்தக கூட்டமைப்பு கடிதம் மூலம் புகார் தெரிவித்து இருந்தது.

இந்நிலையில் மத்திய அமைச்சர் பிரஹலாத் ஜோஷி வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: பாகிஸ்தான் கொடிகள் மற்றும் அந்நாட்டு நினைவுச்சின்னங்கள் உள்ளிட்ட பொருட்களை விற்பனை செய்தது தொடர்பாக அமேசான் இந்தியா, பிளிப்கார்ட், உபயு இந்தியா, தி பிளாக் நிறுவனம் மற்றும் தி பிளாக் கழகம் உள்ளிட்ட நிறுவனங்களுக்கு நுகர்வோர் மத்திய நுகர்வோர் பாதுகாப்பு ஆணையம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது. இதுபோன்ற செயல்களை ஏற்றுக் கொள்ள முடியாது. ஆன்லைன் வர்த்தக நிறுவனங்கள் இந்த பொருட்களை விற்பனை செய்வதை நிறுத்துவதுடன், நாட்டின் சட்டங்களை மதிக்க வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.



# ஹாங்காங், சிங்கப்பூரில் மீண்டும் கரோனா பரவல்: சுகாதாரத் துறை அதிகாரிகள் எச்சரிக்கை

புதுடெல்லி, மே.17-
ஆசியாவில் பல்வேறு பகுதிகளிலும் மீண்டும் கரோனா பரவல் ஏற்பட்டுள்ளது. குறிப்பாக ஹாங்காங் மற்றும் சிங்கப்பூரில் கரோனா வேகமாகப் பரவி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 2019ம் ஆண்டு இறுதியில் சீனாவில் கண்டறியப்பட்ட கரோனா வைரஸ் தொற்று உலக நாடுகளையே அச்சத்தில் ஆழ்த்தியது. மேலும் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தனர். அதோடு, பொருளாதார நெருக்கடியானது வல்லரசு நாடுகளையே திணறடித்தது. தற்போது தான் பல நாடுகளும் அந்தத் தாக்கத்திலிருந்து மீண்டு வருகின்றன. இந்நிலையில், ஆசியாவில் பல்வேறு பகுதிகளிலும் மீண்டும் கரோனா பரவல் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக மக்கள் தொகை அதிகம் இருக்கும் ஹாங்காங் மற்றும் சிங்கப்பூரில் கரோனா வேகமாகப் பரவி வருகிறது.

குறிப்பாக ஹாங்காங்கில் கரோனாவின் செயல்பாடு இப்போது மிக அதிகமாக உள்ளதாக நகரின் சுகாதார மைய தொற்று நோய் பிரிவின் தலைவர் ஆல்பர்ட் ஆவ் தெரிவித்துள்ளார். ஹாங்காங்கில் கரோனா பாசிட்டிவ் விகிதம் கடந்த ஓராண்டில் இல்லாத அளவுக்கு அதிகரித்துள்ளது. இந்நிலையில், அங்கு தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதேபோல சிங்கப்பூரிலும் கரோனா பரவல் அதிகரித்து வருவதாக அந்நாட்டு மருத்துவத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். மே மாதம் முதல் வாரம் கரோனா வைரஸ் பாதிப்பு சுமார் 28% அதிகரித்து 14,200 ஆக உயர்ந்துள்ளது. கரோனா பரவல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப் படுபவர்களின் எண்ணிக்கை சுமார் 30% அதிகரித் துள்ளது.

அதோடு, சிங்கப்பூரில், மக்களின் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்து வருவதன் பிரதிபலிப்பாக இந்த அதிகரிப்பு இருக்கலாம் என்று சுகாதார அமைச்சகம் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள், குறிப்பாக இணை நோய் உள்ளிட்ட ஆபத்துகள் இருப்போர் பூஸ்டர் டோஸ் தடுப்பூசியை எடுத்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

பொதுவாக சுவாசம் தொடர்பான தொற்றுகள் குளிர் காலங்களில்தான் அதிகமாக பரவும். ஆனால், கரோனா கோடைக் காலத்திலும் அதிகம் பரவுவதாக கூறப்படுகிறது. இப்போது சிங்கப்பூர், ஹாங்காங்கில் பரவும் நிலையில், கடந்தாண்டு கூட கோடைக் காலத்தில் சீனாவில் வைரஸ் தொற்று ஏற்பட்டது நினைவுகூரத்தக்கது.

# பாதுகாப்பு துறைக்கு கூடுதலாக ரூ.50,000 கோடி ஒதுக்கீடு: மத்திய அரசு திட்டம்

புதுடெல்லி, மே.17-
ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கையைத் தொடர்ந்து, ராணுவத்துக்கு புதிய ஆயுதங்கள், தளவாடங்கள் மற்றும் தொழில்நுட்ப அமைப்புகளை வாங்குவதற்கு கூடுதல் நிதி ஒதுக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.



இதனையடுத்து துணை பட்ஜெட் மூலம் ரூ.50,000 கோடி கூடுதலாக ஒதுக்குவதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது. இதற்காக நாடாளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரில் ஒப்புதல் பெறப்படலாம். இந்த கூடுதல் நிதி ஒதுக்கீட்டின் மூலம், ஆயுதப்படைகளின் தேவைகள், அத்தியாவசிய கொள்முதல், ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக்கான செலவுகள் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு, மத்திய பட்ஜெட்டில் பாதுகாப்புத் துறைக்காக ரூ.6.81 லட்சம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது முந்தைய நிதியாண்டை விட 9.53% அதிகமாகும். தேசிய ஜனநாயக கூட்டணி அரசு ஆட்சிக்கு வந்ததிலிருந்து, கடந்த 10 ஆண்டுகளில் பாதுகாப்புத் துறைக்கான பட்ஜெட் கிட்டத்தட்ட மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. 201415 ஆம் ஆண்டில், பாதுகாப்புத் துறைக்கான பட்ஜெட் ரூ.2.29 லட்சம் கோடியாக இருந்தது. அதுவே இந்த ஆண்டு, ரூ.6.81 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது, இது மொத்த பட்ஜெட்டில் 13.45% ஆகும்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தானுக்குள் நுழைந்து ஒன்பது பயங்கரவாத முகாம்களை அழித்த இந்தியாவின் ஆபரேஷன் சிந்தூர் நடவடிக்கை, இந்தியாவின் பாதுகாப்புத் திறன்களின் அதிரடி பாய்ச்சலை உலகுக்கு காட்டியது.

ஆபரேஷன் சிந்தூர் வெற்றிக்குப் பின்னர் மே 12 அன்று பிரதமர் நரேந்திர மோடி ஆற்றிய உரையில், "இந்த நடவடிக்கையின் போது, இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்களின் நம்பகத்தன்மை உறுதியாக நிரூபிக்கப்பட்டது. 21ம் நூற்றாண்டின் போரில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களுக்கான நேரம் வந்துவிட்டது என்பதை உலகம் இப்போது அங்கீகரிக்கிறது." என்று பிரதமர் மோடி பெருமிதத்துடன் கூறினார்.

# சட்டவிரோதமாக தங்கியுள்ள வங்கதேசத்தவரை திருப்பி அனுப்பும் பணி தொடக்கம்

அகர்தலா, மே.17-
நாட்டின் பல பகுதிகளில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தவர்கள் கைது செய்யப்பட்டு அவர்களை திருப்பி அனுப்பும் பணி தொடங்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பஹல்காம் தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் சட்டவிரோதமாக தங்கியுள்ளவர்களை கணக்கெடுக்கும் பணி துரிதப்படுத்தப்பட்டது. பலர் கைது செய்யப்பட்டனர். குறிப்பாக, எந்தவித சட்டப்பூர்வமான ஆவணங்களும் இன்றி நாட்டின் பல பகுதிகளில் தங்கியிருந்த வங்க தேசத்தவர் நூற்றுக்கணக்கில் கைது செய்யப்பட்டனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் இந்திய விமானப்படைக்கு சொந்தமான சிறப்பு விமானங்கள் மூலமாக திரிபுரா மாநிலம் அகர்தலாவுக்கு கொண்டு வரப்பட்டனர். பின்னர் அங்குள்ள எல்லை வழியாக வங்கதேசத்துக்கு அவர்களை திருப்பும் பணி தொடங்கியுள்ளதாக காவல் துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதுகுறித்து அந்த வட்டாரங்கள் மேலும் கூறியதாவது: பஹல்காம் தாக்குதலைத் தொடர்ந்து ஆவணங்கள் இல்லாமல் இந்தியாவில் தங்கியிருந்த வங்கதேசத்தவர்களை கைது செய்யும் பணி தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. நாடு முழுவதும் பல்வேறு இடங்களில் தங்கியுள்ள அவர்களை சிறப்பு விமானம் மூலம் அகர்தலா அழைத்து வரும் பணி கடந்த மூன்று நாட்களாக நடைபெற்றது. இதுவரை 480 பேர் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், அவர்களை எல்லை வழியாக வங்கதேசத்துக்கு திருப்பி அனுப்பும் பணி பல்வேறு கட்டங்களாக நடைபெறும். இதுதொடர்பாக வெளியுறவு துறை அமைச்சகம் வங்கதேசத்துக்கு ஏற்கெனவே தெரியப்படுத்தியுள்ளது. அவர்களும் ஆதாரங்களை சரிபார்த்த பின்பு தங்களது நாட்டு மக்களை திரும்ப அழைத்துக்கொள்ள சம்மதித்துள்ளனர். வங்கதேசத்தவர்களை திருப்பி அனுப்பும் நடைமுறை இவ்வார த்துக்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாறு அந்த வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# ஊட்டியில் மலர் கண்காட்சி தொடங்கியதும் கனமழை கட்டண உயர்வாலும் களையிழந்த பூங்கா

ஊட்டி, மே.17-
ஊட்டியில் 127வது மலர் கண்காட்சி தொடங்கியதும் கன மழை பெய்ததாலும் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் குறைவாக காணப்பட்டது. நுழைவு கட்டண உயர்வால் சுற்றுலாப் பயணிகள் அதிருப்தி அடைந்தனர்.



நீலகிரி மாவட்டம் ஊட்டியில் உள்ள புகழ் பெற்ற தாவரவியல் பூங்காவில் 127வது மலர் கண்காட்சி நேற்று தொடங்கி 11 நாட்கள் நடக்கிறது. இந்த ஆண்டு சிறப்பு அம்சமாக பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில், ஜெர்மனியம் சைக்ளோபின் பால்சம், புதிய ரக ஆர்னமெண்டல்கேல், ஓரியண்டல் லில்லி, பேன்சி மேரி கோல்டு, ஜினியா, டெல் முனியம் போன்ற 275 வகையான விதைகள், செடிகள் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்தும் பெறப்பட்டு, மலர் செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு பூங்காவில் பல்வேறு பகுதிகளில் 7.5 லட்சம் மலர் நாற்றுகள் நடவு செய்யப்பட்டு உள்ளது.

இதேபோல் மலர் மாடம் உள்பட பல இடங்களில் 45 ஆயிரம் மலர் தொட்டிகள் வைக்கப்பட்டு உள்ளன. விழாவின் முக்கிய அம்சமாக ராஜ ராஜ சோழனின் அரண்மனை உருவம், கரிகாலனால் கட்டப்பட்ட கல்லணை உருவம் மலர்களால் அலங்கரிக்கப்பட்டு உள்ளது. மொத்தம் 7 லட்சத்திற்கும் அதிகமான மலர்களால் பட்டத்து யானை, அன்னப்பறவை படகு அலங்காரங்கள் செய்யப்பட்டுள்ளன.

நீலகிரி மாவட்டத்தில் இபாஸ் அமல் காரணமாக சுற்றுலாப் பயணிகளின் வருகை குறைவாகவே உள்ளது. இந்நிலையில் மலர்க் கண்காட்சியை காண அதிகளவில் சுற்றுலாப் பயணிகள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை வெகுவாக சரிந்தது. மேலும், கண்காட்சிக்கான நுழைவுக் கட்டணம் உயர்த்தப்பட்டதால், வழக்கமாக கண்காட்சி தொடக்க விழா அன்று காணப்படும் கூட்டம் நேற்று இல்லை. பூங்காவில் குறைந்த அளவே கூட்டம் காணப்பட்டது.

இந்நிலையில், கண்காட்சி தொடங்கிய சிறிது நேரத்தில் ஊட்டியில் கன மழை பெய்தது. இதனால், சுற்றுலாப் பயணிகள் அரங்குகள், விழா மேடை பகுதிகளில் தஞ்சமடைந்தனர். சுமார் ஒரு மணி நேரத்துக்கும் மேல் மழை பெய்ததால், அங்கேயே முடங்கிக் கிடந்தனர். மேலும், புல் தரைகளில் மழை நீர் தேங்கியது. இதனால், புல்வெளிகளில் விளையாட முடியாமல் சுற்றுலாப் பயணிகள் ஏமாற்றம் அடைந்தனர்.



# 10ம் வகுப்பு பொதுத் தேர்வு: புதுச்சேரி, காரைக்கால் தனியார் பள்ளிகளில் 96.90% தேர்ச்சி

புதுச்சேரி, மே.17-
புதுச்சேரி, காரைக்காலில் அனைத்து தனியார் பள்ளிகளிலும் பத்தாம் வகுப்பில் 96.90 சதவீதம் பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

புதுச்சேரியில் தனி கல்விவாரியம் இல்லை. அதனால் புதுச்சேரி, காரைக்காலில் தமிழக அரசு பாடத்திட்டத்தை அரசுப் பள்ளிகளில் பின்பற்றி வந்தன. ஆனால், அங்கு கடந்த கல்வியாண்டு முதல் சிபிஎஸ்இ பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்ததால் தனியார் பள்ளிகள் மட்டும் தமிழக அரசு பாடத்திட்டத்தை பின்பற்றி வருகின்றன.

கடந்த மார்ச் ஏப்ரல் 2025ல் நடைபெற்ற பத்தாம் வகுப்பு (ஷிஷிலிசி) பொதுத்தேர்வில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியைச் சார்ந்த 4,290 மாணவர்களும் 3,977 மாணவிகளும் ஆக மொத்தம் 8,267 பேர் தனியார் பள்ளிகளில் தேர்வு எழுதினர்.

இந்நிலையில் நேற்று (மே 16) வெளியான பத்தாம் வகுப்புத் தேர்வு முடிவுகளின்படி தனியார் பள்ளிகளில் பயின்ற 8,011 மாணவ மாணக்கர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில் 4,109 மாணவர்களும் 3,902 மாணவிகளும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மொத்த தேர்ச்சி 96.90% ஆகும்.




# பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் ஏற்பாட்டில் பொது கூட்டம்

பல்லாவரம், மே.17-
செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பல்லாவரம் தெற்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதி செயலாளர் இ.எஸ்.பெர்னார்ட் அவர்களின் தலைமையில் நடைபெற்ற கழக அரசின் சாதனைகள் விளக்க மாபெரும் பொதுக்கூட்டத்தில் காஞ்சி வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர்.ராஜா, தலைமை கழக பேச்சாளர் கரூர் முரளி ஆகியோர் கழக அரசின் சாதனைகளை விளக்கி சிறப்புரையாற்றினார்கள். இந்நிகழ்வில் மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாநில தகவல் தொழில்நுட்ப அணி துணை செயலாளர் அ.தமிழ்மாறன், மாமன்ற உறுப்பினர் மகேஸ்வரி கார்த்திகேயன், ராஜ்குமார், முஜிப்புர் ரகுமான், வழக்கறிஞர் ராஜாராம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கோ.ஜானகிராமன், மாவட்ட மாநகர பகுதி அணிகளின் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள், மாநகர பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# ரூ.100ல் ஊட்டியை சுற்றி பார்க்கலாம்

ஊட்டி, மே.17-
ரூ.100 டிக்கெட்டில் மொத்த ஊட்டியையும் சுற்றிப் பார்க்க சர்க்யூட் பஸ் திட்டம் அரசு போக்குரவத்து கழகத்தால் செயல்படுத்தப்படுகிறது.




சர்வதேச சுற்றுலாத் தலமான நீலகிரி மாவட்டத்தில் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல், மே மாதங்களில் கோடை சீசன் நடைபெறுகிறது. அவ்வாறு வரும் சுற்றுலா பயணிகளை மகிழ்விக்க கோடை விழாக்கள் நடத்தப்படுகிறது. கோடை சீசனில் மட்டும் சுமார் 10 லட்சம் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கி ன்றனர், ஒரே சமயத்தில் இவ்வளவு சுற்றுலா பயணிகள் வருவதால் நகர் முழுவதும் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. மேலும் தங்கும் இடங்களில் கூடுதல் கட்டணங்கள் வசூலிக்கப்படுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் திட்டமிட்ட பட்ஜெட்டை விட கூடுதல் செலவாகிறது.

இதைத் தொடர்ந்து சுற்றுலாப் பயணிகளின் செலவை குறைக்கும் வகையிலும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வு காணவும் போக்குவரத்து துறை சார்பில் ஒவ்வொரு ஆண்டும் சீசன் சமயங்களில் சர்க்யூட் பஸ் எனப்படும் சுற்று பேருந்துகள் இயக்கப்படுகின்றன. இந்நிலையில், இந்த ஆண்டு தற்போது சுற்று பேருந்துகள் இயக்கம் தொடங்கப்பட்டு உள்ளது. சுற்றுலா பயணிகளின் வருகையை பொறுத்து சுற்று பேருந்துகளின் எண்ணிக்கை இயக்கப்படுகிறது. தற்போது தனியார் மினி பேருந்துகள் இந்த சுற்று பேருந்து திட்டத்தில் அரசு போக்குவரத்துக் கழகத்தின் கீழ் தற்காலிகமாக இயக்கப்படுகின்றன.

இதுகுறித்து போக்குவரத்துத் துறை அதிகாரிகள் கூறும் போது, "கோடை விடுமுறையைக் கொண்டாட ஊட்டி வரும் பயணிகள் வசதிக்காகவும், சுற்றுச்சூழலைக் காக்கவும் சுற்றுப் பேருந்து இயக்கப்படுகிறது. இந்தப் பேருந்துகளில் பெரியவர்களுக்கு ரூ.100ம், சிறியவர்களுக்கு ரூ.50 கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. மத்தியப் பேருந்து நிலையத்தில் தொடங்கி தண்டர்வெர்ல்டு, படகு இல்லம், தாவரவியல் பூங்கா, தொட்ட பெட்டா மலைச் சிகரம், டீ ஃபேக்டரி மற்றும் ரோஜா பூங்கா வழியாக மீண்டும் மத்தியப் பேருந்து நிலையத்தை வந்தடையும்.

காலையில் மத்திய பேருந்து நிலையத்தில் இருந்து செல்பவர்கள் தாவரவியல் பூங்காவைக் கண்டு களித்த பின்னர், அடுத்த பேருந்தில் தொட்ட பெட்டாவுக்குச் செல்லலாம். இந்த பேருந்தில் ஒரு நாளைக்கு ஒரு முறை பயணச்சீட்டு வாங்கினால் மட்டுமே போதுமானது. அதனைக் காண்பித்து அந்த நாள் முழுவதும் பிரயாணம் மேற்கொள்ளலாம், கடந்த ஆண்டு ஒரு நாளைக்கு அதிகபட்சமாக 25 சுற்று பேருந்துகள் பயன்படுத்தப் பட்டன. தேவைப்பட்டால் அந்த அளவுக்கு பேருந்துகள் இயக்கப்படும்' என்றனர். சுற்று பேருந்து திட்டத்திற்கு சுற்றுலா பயணிகளும், உள்ளூர் வாசிகளும் வரவேற்பு தெரிவித்துள்ளனர்.




# சிபிஎஸ்சி மற்றும் ஜே இ இ தேர்வுகளில் இந்திய அளவில் முதலிடம் பெற்ற ஸ்ரீ சைதன்யா பள்ளி மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது

பல்லாவரம், மே.17-
இந்திய அளவில் தொடர்ந்து முதலிடம் பிடித்து வரும் நிலையில் சைதன்யா பள்ளியில் பயின்று இந்த ஆண்டு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களை கௌரவிக்கும் வகையில் பாராட்டு விழா பல்லாவரத்தில் நடைபெற்றது.

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் ரேடியல் சாலையில் உள்ள சைதன்யா பள்ளியில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் இந்த ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் எடுத்த மாணவர்களுக்கு பள்ளி நிறுவனர் டாக்டர் பி.எஸ். ராவ்வின், இயக்குனர்கள் சுஷ்மா போபனா, சீமா போபனா, நாகேந்திரா மற்றும் தமிழ்நாடு செயல்பாட்டு தலைவர் ஹரி பாபு ஆகியோர் மாணவர்களை பூங்கொத்து அளித்து வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டது.

அப்போது செய்தியாளர்களிடம் பேசும்போது பள்ளியின் ஆசிரியர்கள் கூறியதாவது ஒவ்வொரு பாடத்திட்டத்தின் நுணுக்கத்தை ஆறாம் வகுப்பில் இருந்தே மாணவர்களுக்கு கற்பிப்பது மூலம் அவர்கள் 12 ஆம் வகுப்பு வரும்பொழுது தேசிய அளவிலான போட்டித் தேர்வினை தன்னம்பிக்கையுடன் எளிதாக கையாளும் முறையில் தயாராகி வெற்றி பெறுகின்றனர் என கூறினர்.

மேலும் இந்நிகழ்வில் தங்களுக்கு உண்டான பள்ளியின் கற்றல், கற்பித்தல் அனுபவத்தினை மாணவர்களும், பெற்றோர்களும் மேடையில் பரிமாறிக் கொண்டனர்.

சைதன்யா பள்ளியில் பயிலும் மாணவர்கள் இந்த முறை 100 சதவீதம் தேர்ச்சி அடைந்திருக்கிறதாகவும் அவர்கள் தெரிவித்தனர்




## அஜந்தா, எல்லோரா உள்ளிட்ட இடங்களை பார்த்து ரசிக்க பாரத் கவுரவ் சுற்றுலா ரயில் இயக்கம்

சென்னை, மே.17-

அஜந்தா, எல்லோரா, கஜுராஹோ ஆகிய வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களை பார்த்து ரசிப்பதற்காக, இந்திய ரயில்வே பாரத் கவுரவ் என்ற சுற்றுலா ரயிலை இயக்குகிறது.

இந்தியாவின் தொல் பொருள் ஆராய்ச்சியின் வரலாற்று சிறப்பு மிக்க கட்டிடக் கலையின் பெருமையை பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக, 'மார்வெல்ஸ் ஆஃப் சென்ட்ரல் இந்தியா' என்ற பெயரில் பாரத் கவுரவ் சுற்றுலா ரயிலை இந்திய ரயில்வே இயக்குகிறது. சவுத் ஸ்டார் ரயில், டூர் டைம்ஸ் சுற்றுலா ரயில் ஆப்ரேட்டர் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இந்த சுற்றுலா ரயில், கஜுராஹோ, அஜந்தா, எல்லோரா, ஒடிசா, ஹைதராபாத், குவாலியர், அவுரங்காபாத் ஆகிய இடங்களில் உள்ள வரலாற்று சிறப்பு மிக்க இடங்களை பார்த்து ரசித்து அறிந்து கொள்ளும் வகையில் இந்தச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த 13 நாள் சுற்றுலா பயணம், வரும் ஜூன் 27ம் தேதி தொடங்குகிறது. முழுமையாக குளிரூட்டப்பட்ட பெட்டிகளுடன், வழித் தடங்கள் பற்றிய தகவல்களுக்கான பொது அறிவிப்பு அமைப்புகள், பொழுதுபோக்கு வசதிகள், சிசிடிவி கேமரா வசதிகள், ஒவ்வொரு பெட்டிக்கும் ஒரு சுற்றுலா மேலாளர் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் இந்த ரயில் இயக்கப்படுகிறது. இந்த பயணத்தில் தென்னிந்திய உணவு வகைகள் உட்பட பல்வேறு உணவு வகைகள் பரிமாறப்படும்.

இந்த சிறப்பு ரயில் கேரள மாநிலம், கொல்லத்தில் இருந்து கிளம்பி தமிழகத்தில் போத்தனூர், ஈரோடு, சேலம், ஜோலார்பேட்டை, காட்பாடி, பெரம்பூர் வழியாக இயக்கப்படும். மேலும், மத்திய, மாநில அரசு ஊழியர்கள் இந்த பயணத்துக்கு விடுப்பு (எல்டிசி) பயணச் சலுகையைப் பயன் படுத்தி பணத்தைத் திரும்பப் பெறலாம். இந்த சுற்றுலாவுக்கு www.tourtimes.in என்ற இணையதளம் வழியாக டிக்கெட் முன்பதிவு செய்யலாம். அல்லது பயணிகள் 7305 85 85 85 என்ற எண்ணை தொடர்பு கொண்டு அழைக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அரூர் பகுதியில் கனமழை இடி, மின்னல் தாக்கியதில் முதியவர் உயிரிழப்பு

அரூர், மே.17-

அரூர் பகுதியில் கனமழையின் போது இடி, மின்னல் தாக்கியதில் முதியவர் உயிரிழந்தார். மேலும், 3 கால்நடைகளும் உயிரிழந்தன.

தருமபுரி மாவட்டம் அரூர் கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாட்களாக மாலை மற்றும் இரவு நேரங்களில் பரவலாக மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினம் இரவு பல்வேறு இடங்களில் கனமழை பெய்தது. கடத்தூர், பையர்நாயக்கன்பட்டி, நவலை, வேப்பம்பட்டி, அரூர், மாம்பட்டி, கீரைப்பட்டி, அச்சல்வாடி, எல்லப்புடையாம்பட்டி, எட்டியம்பட்டி, வேப்பம்பட்டி, கோட்டப்பட்டி, நரிப்பள்ளி, தீர்த்தமலை, கம்பைநல்லூர், மொரப்பூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது.





பலத்த காற்று, இடி, மின்னலுடன் கனமழை பெய்தது. இதில், அரூர் பகுதியில் பல்வேறு இடங்களில் மரங்கள் சாய்ந்தன. வீடுகளின் கூரைகளும் காற்றில் பறந்து சேதமடைந்தன. பையர் நாயக்கன்பட்டி ஊராட்சிக்கு உட்பட்ட உட்டப்பட்டி கிராமத்தில் இருளர் இனத்தைச் சேர்ந்த காளியப்பன் (60) என்பவர் கால்நடைகளுக்கு காவலுக்காக மாட்டு கொட்டகையில் தங்கியிருந்தார்.

நேற்று முன்தினம் இரவு இடியுடன் கூடிய கன மழை பெய்தபோது இடி, மின்னல் தாக்கியதில் காளியப்பன் உயிரிழந்தார். அவரது கொட்டகையில் கட்டியிருந்த ஒரு கறவை மாடு, கன்று குட்டியும் உயிரிழந்தன. இதேபோல் எல்லப்புடையாம்பட்டி அருகேயுள்ள புறாக்கள் உட்டை கிராமத்தில் இடி, மின்னல் தாக்கியதில் மாணிக்கம் என்பவருக்கு சொந்தமான பசு மாடு ஒன்று உயிரிழந்தது.

மின் விநியோகம் பாதிப்பு: பலத்த இடி, மின்னல், காற்று காரணமாக மின்வாரிய டிரான்ஸ்பார்மர், பீடர்களில் பழுது ஏற்பட்டு வருகிறது. நேற்று முன்தினம் இரவு அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, பகுதிகளில் மட்டும் 20க்கும் மேற்பட்ட பீடர்கள் பாதிக்கப்பட்டன. சுமார் 30க்கும் மேற்பட்ட பகுதிகளில் மின் கம்பிகள் அறுந்து விழுந்தன. இதனால் பல்வேறு பகுதிகளில் மின் தடை ஏற்பட்டது. தொடர்ந்து சீரமைப்புப் பணியில் இரவு, பகலாக மின் வாரிய பணியாளர்கள் ஈடுபடுத்தப்பட்டனர். இதனால் படிப்படியாக மின் விநியோகம் சீரமைக்கப்பட்டது.

ஒகேனக்கல்லில் 90 மி.மீ. மழை: தருமபுரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை பெரும்பாலான பகுதிகளில் மழை பெய்தது. மாவட்டத்தில் அதிகபட்ச அளவாக ஒகேனக்கல் பகுதியில் 90 மில்லி மீட்டர் மழை பதிவானது.

நேற்று காலை வரை பதிவான மழை அளவு (மில்லி மீட்டரில்): கடத்தூரில் 59, பையர் நாய்க்கன் பட்டி 46, நவலை 44, வேப்பம்பட்டி 32, மாரண்ட அள்ளி பகுதியில் 31, அரூர் 30, மாம்பட்டி 23, பென்னாகரம் பகுதியில் 20, தருமபுரி பகுதியில் 15 மி.மீ மழை பதிவானது. கனமழையால் விவசாயிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மின் வாரியம் எச்சரிக்கை: மழைக் காலங்களில் மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என மின் வாரியம் அறிவுறுத்தியுள்ளது. இது குறித்து தமிழ்நாடு மின்சார வாரியம் அரூர் செயற்பொறியாளர் (பொ) அழகுமணி கூறியதாவது: அரூர் மற்றும் சுற்றுப் பகுதிகளில் பலத்த காற்றும், அவ்வப்போது மழையும் பெய்து வருகிறது. பலத்த காற்றின் காரணமாக மரக்கிளைகள் முறிந்து விழுவதாலும், மரக்கிளைகள் மின் கம்பிகள் மீது உரசுவதாலும் மின் தடை, மின் விபத்துகள் ஏற்படுகிறது.

எனவே, பொதுமக்கள் மின்சார மின்மாற்றியின் அருகில் அல்லது மின் பாதைகளின் அருகில் செல்ல வேண்டாம். மின் கம்பங்கள், ஸ்டே கம்பிகள் மற்றும் மின்மாற்றி அருகில் செல்வதையோ, தொடுவதையோ தவிர்க்க வேண்டும். மின் கம்பத்திலோ, ஸ்டே கம்பிகளிலோ ஆடு, மாடு போன்ற கால்நடைகளை கட்ட வேண்டாம். எந்த இடத்திலாவது மரக்கிளைகள் முறிந்து விழுந்தாலோ, மின் கம்பி அறுந்து விழுந்து இருப்பதைக் கண்டாலோ உடனடியாக அருகில் உள்ள மின்வாரிய அலுவலகத்திற்கோ அல்லது அந்தந்த பகுதி மின் வாரிய அலுவலக பொறியாளர் களுக்கோ தகவல் தெரிவிக்க வேண்டும், என்றார்.

ஒசூரில் 39 மி.மீ மழை: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு ஒசூர், ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி உட்பட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மிதமானது முதல் கனமழை பெய்தது.

நேற்று காலை 7 மணி நிலவரப் படி மாவட்டத்தில் பல்வேறு ஊர்களில் பெய்த மழையளவு (மில்லி மீட்டரில்) விவரம்: ஒசூர் 39, ஊத்தங்கரை 34, பாம்பாறு அணை 28, தேன்கனிக்கோட்டை, கெலவரப்பள்ளி அணையில் தலா 25, பெனுகொண்டாபுரம் 22.40, அஞ்செட்டி 20, கிருஷ்ணகிரி அணை 14.2, ராயக்கோட்டை 13, கிருஷ்ணகிரி 10.30, நெடுங்கல் 9.2, சூளகிரி, போச்சம்பள்ளியில் தலா 5, சின்னாறு அணை 4. பாரூர் 2.8 மி.மீ மழை பதிவானது.

## மணிப்பூர் துப்பாக்கி சண்டையில் 10 தீவிரவாதிகள் உயிரிழப்பு: 7 தீவிரவாதிகள் கைது

இம்பால், மே.17-

மணிப்பூரின் சந்தேல் மாவட்டத்தில் அசாம் ரைபிள்ஸ் படையுடன் நடந்த துப்பாக்கிச் சண்டையில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர்.



இதுகுறித்து 'எக்ஸ்' தளத்தில் ராணுவத்தின் கிழக்கு படைப்பிரிவு வெளியிட்டுள்ள பதிவில், "இந்தியா மியான்மர் எல்லைக்கு அருகில், மணிப்பூரின் சந்தேல் மாவட்டம், நியூ சாம்தால் கிராமத்தில் ஆயுதமேந்திய நபர்களின் நடமாட்டம் இருப்பதாக புதன்கிழமை உளவுத் தகவல்கள் கிடைத்தன. இதன் அடிப்படையில் அசாம் ரைபிள்ஸ் படையினர் அங்கு விரைந்து சென்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இதில் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் 10 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். சம்பவ இடத்தில் இருந்து கணிசமான அளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன" என்று தெரிவித்துள்ளது. இது தொடர்பாக கொஹிமாவில் உள்ள ராணுவ செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "அங்கு ராணுவ நடவடிக்கை தொடர்கிறது. அது முடிவுக்கு வந்தவுடன் அது தொடர்பான தகவல்கள் பகிர்ந்து கொள்ளப்படும்" என்றார். இதற்கிடையில் மணிப்பூரில் பல்வேறு அமைப்புகளை சேர்ந்த 7 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்தாக போலீஸார் நேற்று தெரிவித்தனர்.


தவுபால், காக்சிங், விஷ்ணுபூர். சூரசந்த்பூர் ஆகிய மாவட்டங்களில் இவர்கள் கடந்த செவ்வாய் மற்றும் புதன்கிழமை கைது செய்யப்பட்டதாக போலீஸார் கூறினர். இவர்களிடம் இருந்து துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்களை போலீஸார் பறிமுதல் செய்துள்ளனர்.

## சமையல் எரிவாயு இணைப்புகள் அதிகம் வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதலிடம்

டெல்லி, மே.17-

சமையல் எரிவாயு இணைப்புகள் அதிகம் வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முதல் மாநிலமாக திகழ்கிறது. வீட்டு உபயோக சமையல் எரிவாயு 14 கிலோ, 10. 5 கிலோ ஆகிய வகைகளில் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் 2024ம் ஆண்டு ஏப்ரல் முதல் 2025 மார்ச் வரை 1.06 லட்சம் எல்பிஜி இணைப்புகள் வழங்கப்பட்டதாக இந்தியன் ஆயில் கார்பொரேஷன் நிறுவனம் தெரிவித்துள்ளது. இதே காலகட்டத்தில் கர்நாடகா மாநிலம் 60,000 எல்பிஜி இணைப்புகளை வழங்கி உள்ளது.

நாட்டிலேயே அதிகபட்ச இணைப்புகள் தமிழ்நாட்டில் தான் வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளது. 60% இணைப்புகள் நகரப் பகுதிகளில் பெறப்பட்டதாக குறிப்பிட்டுள்ளது. தமிழ்நாட்டில் 1.34 லட்சம் இண்டேன் கேஸ் நுகர்வோர் உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது. மாநிலத்தில் அதிக இணைப்புகள் பெறுவதில் சென்னை முன்னிலையிலும், கோவை , திருச்சி, மதுரை ஆகிய நகரங்கள் அடுத்தடுத்த இடங்களிலும் இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பர்வத மலையேற புதிய கட்டுப்பாடுகள்

தென் கைலாயம் என அழைக்கப்படும் நந்தி வடிவமான 4,560 அடி உயர பர்வதமலையில் தமிழ்நாடு மட்டுமின்றி, வெளிமாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் பக்தர்கள் மலையேறி சுவாமி தரிசனம் செய்கின்றனர். படிக்கட்டுகள் கரடு முரடான பாதைகள், ஏணி படி, ஆகாய படி, பாறைகள் ஆகியவற்றை கடந்து பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய வேண்டும்.சில நேரங்களில் முதியவர்கள், ரத்த அழுத்தம் அதிகமாக உள்ளவர்கள், உடல்நல குறைவால் மலை உச்சிக்கு செல்லும்போது மூச்சு திணறல் காரணமாக பலியாகின்றனர்.

தற்போது மாவட்ட நிர்வாகம் உத்தரவின்படி இந்து சமய அறநிலையத்துறை மலையேற கட்டுப்பாடுகள் விதித்துள்ளது. இதுகுறித்து அறிவிப்பு பலகைகள் பச்சையம்மன் கோயில் மலை அடிவாரம் வீரபத்திரன் கோயில் ஆகிய பகுதிகளில் வைக்கப்பட்டுள்ளது. அறிவிப்பு பலகையில் தெரிவித்திருப்பதாவது: பக்தர்களின் பாதுகாப்பு கருதி 10 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்ட பெரியவர்கள் மலை மீது ஏற அனுமதி இல்லை. மேலும் உயர் ரத்த அழுத்தம் மற்றும் உடல்நல குறைபாடுகள் உள்ளவர்கள் மலை பயணத்தினை தவிர்க்கவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

## பெருங்களத்தூர் தெற்கு பகுதி திமுக சார்பில் நான்காண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம்

பெருங்களத்தூர், மே.17-

காஞ்சி வடக்கு மாவட்டம் தாம்பரம் மாநகரம் பெருங்களத்தூர் தெற்கு பகுதி சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு சாதனை விளக்க மாபெரும் பொதுக் கூட்டம். தாம்பரம் மாமன்ற உறுப்பினர்களின் குழு தலைவர் பெருங்களத்தூர் தெற்கு பகுதி செயலாளர் எஸ்.சேகர் தலைமையில். பெருங்களத்தூர் தெற்கு பகுதி துணைச் செயலாளர் பி.புகழேந்தி வரவேற்பிலும் இதில் சிறப்பு அழைப்பாளர்களாராக தாம்பரம் மாநகர செயலாளர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, தாம்பரம் மாநகர துணைச் செயலாளர் மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், தலைமை கழக பேச்சாளர்கள் தா.ஜெகதீசன், பம்மல் தினேஷ், தேர்தல் தொகுதி பார்வையாளர் பருதி இளம் ஸ்ருதி, வட்ட செயலாளர்கள் எஸ்.ஐசக், வெங்கடேசன், சஞ்சீவி, சுரேஷ், மஞ்சுநாதன், இளைஞரணி அமைப்பாளர் ஆர்.ஓம்.பிரகாஷ் பகுதி பொருளாளர் ஜே.மணிவண்ணன், மாநகரப் பிரதிநிதி கே.சுந்தர், கோட்டி, பகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் டி.ராஜேஷ் பெருங்களத்தூர் தெற்கு பகுதி நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர், பகுதி இளைஞரணி மாணவரணி அணிகளின் நிர்வாகிகள். வட்ட கழக நிர்வாகிகள் கழக மூத்த நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



■ பொள்ளாச்சி அருகே ஆழியார் அணையில் இருந்து பழைய ஆயக்கட்டு பாசன பகுதிகளில் முதல் போகத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. அக்டோபர் 15 வரை 152 நாட்களுக்கு தேவைக்கேற்ப தண்ணீர் திறக்கப்படும். 6,400 ஏக்கர் நிலங்களுக்கு 1205 மி.கனஅடிக்கு மிகாமல் நீர் திறக்கப்பட்டது.

## பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சென்னையில் 70,000 ஆட்டோக்களில் க்யூஆர் குறியீடு: போக்குவரத்து காவல்துறை தகவல்

சென்னை, மே.17-

பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய சென்னையில் 70,000 ஆட்டோக்களில் க்யூஆர் குறியீடு ஒட்டப்பட்டுள்ளதாக போக்குவரத்து காவல்துறை தெரிவித்துள்ளது. பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக கடந்த மார்ச் மாதம் இந்த திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. ஓட்டுநர் இருக்கைக்கு பின்னால் பயணிகள் எளிதில் தெரியும் வகையில் இந்த குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளன, இதில் வாகனம், அதன் உரிமையாளர் மற்றும் ஓட்டுநர் பற்றிய முக்கியமான தகவல்களை பயணிகள் பெற உதவுகின்றன.




அவசர காலங்களில், பயணிகள் குறியீட்டை ஸ்கேன் செய்து எஸ்ஓஎஸ் பொத்தானை அழுத்தலாம், இது சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறைக்கு ஒரு எச்சரிக்கையை அனுப்பும், இது வாகனத்தின் சரியான இருப்பிடம் உள்ளிட்ட விவரங்களுடன் அதன் உரிமையாளரின் விவரங்களையும் வழங்கும். கூடுதலாக, பயணிகள் 112, அவசர கட்டுப்பாட்டு அறையை அழைத்து, உடனடியாக புகாரும் அளிக்க முடியும். தற்போது வரை சுமார் 70,000 வாகனங்களில் க்யூஆர் குறியீடுகள் வைக்கப்பட்டுள்ளதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து போக்குவரத்து காவல்துறை அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை நகரின் எல்லைக்குள் அருகிலுள்ள மாவட்டங்களைச் சேர்ந்த வாகனங்கள் உள்பட சுமார் 89,641 ஆட்டோக்கள் ஓடுவதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். ஆரம்பத்தில், 90,000 வாகனங்களில் க்யூஆர் குறியீடுகளை ஒட்டுவது எங்கள் குறிக்கோளாக இருந்தது, இதுவரை 70,000 வாகனங்களில் இந்த செயல்முறையை முடித்துள்ளோம். தனி ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் ஆட்டோ ஓட்டும் உரிமையாளர்கள் ஸ்டிக்கர்களை பெறவில்லை என்றால் தங்கள் உள்ளூர் போக்கு வரத்து காவல் நிலையத்தைத் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தமிழில் கிடைக்கும் கூகுள் படிவத்தை நிரப்புவதன் மூலம் நீங்கள் ஆன்லைனில் விண்ணப்பிக்கலாம். விவரங்களை சரிபார்த்த பின்னர் க்யூஆர் குறியீட்டை மின்னஞ்சல் மூலம் அனுப்புவோம். அவர்கள் க்யூஆர் குறியீட்டைப் பதிவிறக்கம் செய்து தங்கள் வாகனங்களில் ஒட்டிக்கொள்ளலாம். பாதுகாப்பு தொடர்பான புகார்களை தவிர, அதிக பணம் கேட்பது மற்றும் பிற வகையான துன்புறுத்தல்கள் குறித்து பல புகார்கள் வருகின்றன.

## மதுரையில் சுற்றுலா தலமாக மாறிய வைகை தடுப்பணை பகுதி

மதுரையில் கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்க வைகை ஆற்றில் ஓடும் தண்ணீரில் மக்கள் குளித்து மகிழ்கின்றனர்.



மதுரை சித்திரைத் திருவிழாவின் முக்கிய நிகழ்வான கள்ளழகர் வைகை ஆற்றில் எழுந்தருளுவதையொட்டி வைகை அணையில் இருந்து மே 8ம் முதல் 12ம் தேதி வரையிலும் தினமும் சுமார் ஆயிரம் கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. 12ம் தேதி கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கியபோது, மதுரை மாநகர் பகுதி வைகை ஆற்றில் முழங்கால் அளவிற்கு தண்ணீர் சென்றது. கள்ளழகர் வைகையில் இறங்கியபோது ஏராளமான பக்தர்கள், இளைஞர்கள், பெண்கள் ஆற்று நீரில் நின்றபடி சுவாமி தரிசனம் செய்தனர்.

இந்நிலையில், தொடர்ந்து வைகை ஆற்றில் தண்ணீர் செல்வதால் சுட்டெரிக்கும் கோடை வெயில் தாக்கத்தை தணிக்கும் விதமாக வைகை ஆற்றில் பொதுமக்கள் இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் குளித்து மகிழ்கின்றனர். மதுரை மட்டுமின்றி பல்வேறு பகுதியில் இருந்து மதுரைக்கு சுற்றுலா வருவோரும் ஏ.வி.மேம்பாலம், அருகிலுள்ள தடுப்பு அணை , படிக்கட்டுகளில் குளுகுளுவென குளித்து மகிழ்கின்றனர். இதன் காரணமாக, வைகையாற்று பகுதியே சுற்றுலா தலம் போல மாற்றி இருக்கிறது. தொடர்ந்து குளிக்க வருவோரின் எண்ணிக்கை அதிகரிப்பதால் காவல் துறையினரும் அப்பகுதிக்கு ரோந்து சென்று கவனமுடன் குளிக்க வேண்டும் என மைக் மூலம் எச்சரிக்கின்றனர்.

# லட்சக்கணக்கானோர் பங்கேற்கும் சிறப்புமிகு குடியாத்தம் ஸ்ரீ கெங்கையம்மன் சிரசு திருவிழா

வேலூர், மே.17-

வேலூர் மாவட்டம் திருவிழா முன்னிட்டு அனைத்து சாலை வழி தடங்களிலும், பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும், தாகம் தீர.. பசியாற..., நீர், மோர், கலர் பாக்கெட் பழச்சாறுகள் மற்றும் தயிர் சாதம், எலுமிச்சை சாதம், புளி சாதம், காய் சாதம், கீ'ரைஸ், சாம்பார் சாதம், காய்கள் சாதம், பிரியாணி சாதம் உட்பட ஏராளமானோர் ஆங்காங்கே அன்னதானம் வழங்கினர்

கலர் பாக்கெட் ரசாயன ஜூஸ்களால் மக்களுக்கு வயிற்று வலி, தலைவலி வாந்தி மயக்கம் இந்த ரசாயன பாக்கெட்டுகளை, சுகாத ாரமற்ற ஐஸ் கட்டிகளை உபயோகப்படுத்துவது போன்றவற்றைகளுக்கு அரசு தடை செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்...

இதற்கு பதிலாக மிகவும் ஆரோக்கியமான, கரும்பாலான வல்லம் பானகம், தர்பூசணி ஜூஸ், பப்பாளி ஜூஸ், பல்வேறு பழங்கள் ஜூஸ்கள் மற்றும் முலாம்பழம் ஜூஸ் போன்றவற்றை ஆரோக்யமான உணவு வகைகளை பயன்படுத்த அரசு அனுமதிக்கப்படவும், பொருட்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க வேண்டியும் கோரிக்கை...

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, கோபாலபுரம், குடியாத்தம் கௌண்டைய மகா நதியின் கரையில் அமைந்துள்ளது ஸ்ரீ கெங்கையம்மன் கோயில். விஷ்ணுவின் அம்சமாகக் கருதப்படும் பரசுராமன் தனது தாயின் தலையை வெட்டி மீண்டும் உயிர்ப்பித்த புராணக் கதையை நினைவுகூரும் விதமாக ஆண்டுதோறும் வைகாசி 1ம் தேதி அம்மன் சிரசு ஊர்வலம் நடைபெறும்.

ஜமதக்னி முனிவர் ரேணுகா தேவி, முன்னொரு காலத்தில் விதர்ப தேசத்தை ஆண்டுவந்த விஜரவத என்ற அரசன் குழந்தை வரம் வேண்டி பிரம்மனை நோக்கிக் கடும் தவமிருந்தார். அரசனின் தவத்தை மெச்சிய பிரம்மன், ரேணுகா தேவியை மகளாகப் பெற்றெடுக்கும் பாக்கியத்தை அருளினார். பிரம்மனின் அருளின்படி பிறந்த ரேணுகா தேவி சீரும் சிறப்புமாக வளர்க்கப்பட்டார். பின்னாளில், ரேணுகா தேவிக்கும் ஜமதக்னி முனிவருக்கும் திருமணம் நடந்தது. இவர்களுக்கு விஷ்ணுவின் அம்சமான பரசுராமன் உள்ளிட்ட நான்கு மகன்கள் பிறந்தனர்.

வழக்கமாக அதிகாலை நேரத்தில் தாமரைக் குளத்தில் நீராடி குளக்கரை மண்ணில் குடத்தைச் செய்து அதில் தண்ணீரைப் பிடித்து வீட்டுக்கு எடுத்துவருவார் ரேணுகா தேவி. அப்படி ஒரு நாள் நீராடச் சென்றபோது தாமரை குளத்தில் தேவர் குலத்தைச் சேர்ந்த அழகிய கந்தர்வனின் உருவம் தெரிந்தது. கந்தர்வனின் அழகை ரசித்த ரேணுகா தேவி ஒரு நிமிடம் அப்படியே மெய்மறந்து நின்றார். சிறிது நேரத்தில்




மண்ணால் ஆன குடத்தை வழக்கம்போல செய்ய முயன்றும் முடியவில்லை.

நடந்தது என்னவென்று தெரியாமல் ரேணுகா தேவி திகைத்து நின்றார். நீண்ட நேரமாகியும் மனைவி திரும்பி வராத காரணத்தை தனது ஞான திருஷ்டியால் ஜமதக்னி முனிவர் தெரிந்துகொண்டார். கந்தர்வனின் அழகில் மயங்கியதால் மண் குடத்தை செய்ய முடியாமல் நிற்கும் தனது மனைவி கற்பு நெறி தவறிவிட்டார் எனக் கருதினார். தனது மகன்களை அழைத்த ஜமதக்னி முனிவர், மனைவியின் தலையைக் கொய்துவிட்டு வருமாறு கட்டளையிடுகிறார்.

தந்தை சொல் வேத வாக்கு, தாயின் பாசத்தால் மூன்று மகன்கள் மறுக்க. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை என்று கோடாரியுடன் புறப்பட்டான் பரசுராமன். பெற்ற மகனே தன்னைக் கொல்ல வருகிறான் என்பதை தெரிந்த தாய் கலக்கத்துடன் தன்னைக் காத்துக்கொள்ள ஓடினார். நீண்ட தூரம் ஓடிய களைப்பால் இடுகாட்டு வெட்டியான் ஒருவர் வீட்டில் தஞ்சமடைந்தார். பெற்ற தாய் என்று நினைக்காமல் வெட்ட வந்த பரசுராமனைத் தடுத்தார் வெட்டியான் மனைவி. தந்தையின் கட்டளையைத் தடுக்க நினைத்த வெட்டியானின் மனைவியின் தலையை வெட்டிய பரசுராமன், பின்னர் தாயின் தலையையும் வெட்டிச் சாய்த்தான்.

கட்டளையை நிறைவேற்றிய பரசுராமன் தந்தை முன்னால் நின்றான். மகனின் செயலை மெச்சிய ஜமதக்னி முனிவர், என்ன வரம் வேண்டும் கேள் என்றார். தந்தையே, உங்கள் கட்டளையை நிறைவேற்றி விட்டேன். இறந்த தாய் எனக்கு வேண்டும். அவரை உயிர்ப்பித்துக் கொடுங்கள் என்றான். மகனின் ஆசையை நிறைவேற்றப் புனித நீர் கொடுத்து உன் தாயை உயிர்ப்பித்துக் கொள் என்றார். தாயின் உயிர் கிடைக்கும் ஆசையில் ஓடிவந்த பரசுராமன், வெட்டியான் மனைவியின் உடலில் தனது தாயின் தலையை வைத்தும், தனது தாயின் உடலில் வெட்டியானின் மனைவியின் தலையை வைத்து அவசரத்தில் உயிர்ப்பித்துவிட்டான். இந்த புராணக் கதையை விளக்குமாறு, கெங்கையம்மன் சிரசு திருவிழாவாக கோலாகலமாக கொண்டாடப்படுகிறது.

சிரசு ஊர்வலம்

குடியாத்தம் நகரை இரண்டாக பிரிக்கும் கௌவுண்டன்ய மகா நதியின் கரையில் கோபலாபுரம் என்ற பகுதியில் அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் கோயில் உள்ளது. ஒவ்வொரு ஆண்டும் வைகாசி 1ம் தேதி அதிகாலை தரணம்பேட்டையில் உள்ள முத்தியாலம்மன் கோயிலில் உள்ள அம்மன் சிரசு பக்தர்களின் வெள்ளத்தில் எடுத்துவரப்படும். கோபலாபுரத்தில் உள்ள கெங்கையம்மன் கோயிலில் வெட்டியானின் மனைவி உடலில் அம்மன் சிரசு வைக்கப்பட்டு கண் திறக்கப்படும். இந்த ஒரு நாள் திருவிழாவைக் காண வேலூர் மாவட்ட மக்கள் இல்லாமல் ஆந்திரா மற்றும் கர்நாடக மாநிலத்தில் இருந்தும் பக்தர்கள் வருவார்கள். திருவிழாவைக் காண மட்டும் சுமார் 2 லட்சத்திற்கும் மேற்பட்ட பக்தர்கள் திரளுவார்கள். குடியாத்தம் நகரமே வித்தியாசம் இல்லாமல் திருவிழாக்கோலம் கண்டிருக்கும்.

கோபலாபுரம் ஊர் மக்கள் சார்பில் கூழ் வார்த்தல், பொங்கலிட்டு பல்வேறு பூஜைகள் செய்து வழிபட்டு, பல்வேறு பாரம்பரிய மேளதாளங்களுடன், பல்வேறு நடன கலை நிகழ்ச்சிகளுடன் நிகழ்ச்சி மக்கள் மகிழ்ச்சியோடு ஆரவாரமாக கண்டுகளிக்கும் வகையில் இந்த திருவிழா நடைபெறுவது வழக்கம், நகரின் பல்வேறு பகுதிகளில் இருந்து தாரை தப்பட்டைகளுடன் எடுத்துவரப்படும் மாலை அம்மனுக்கு சார்த்தப்படும். அன்று மாலை 7 மணியளவில் வெட்டியான் மனைவி உடலில் இருந்து வெட்டப்படும் சிரசு முக்கிய வீதிகள் வழியாக சுண்ணாம்பு பேட்டை சலவை படித்துறையில் சிரசு ஊர்வலம் நிறைவடைகிறது. மீண்டும் முத்தியாலம்மன் கோயிலில் அம்மன் சிரசு வைக்கப்பட்டு வழிபாடு நடத்தப்படும்.

சூறை தேங்காய்

தாயே... நீயே... துணை என கெங்கையம்மனை சரணடைந்தால் கேட்கும் வரங்களை அளிப்பார் என்பது பக்தர்களின் நம்பிக்கை. வேண்டுதல் நிறைவேறியவர்கள் சிரசு ஊர்வலத்தின்போது வழி நெடுகிலும் சூறைத் தேங்காய் உடைப்பது பிரசித்தம். ஒவ்வொரு ஆண்டும் சுமார் சிரசு ஊர்வலத்தில் மட்டும் சுமார் 3 டன் தேங்காய் உடைக்கப்படுகின்றனர். கோயிலில் சுமார் 5 டன் தேங்காய் பக்தர்களால் உடைக்கப்படுகிறது. இதனைத் தொடர்ந்து பொதுமக்கள் தன்னார் வலர்கள், நிறுவன தொழிலதிபர்கள் என கோவிலுக்கு வரும் அனைத்து சாலைகளிலும் நீர் மோர் தண்ணீர் பந்தல், தயிர் சாதம் எலுமிச்சை சாதம், சாதம், சிக்கன் பிரியாணி மட்டன் பிரியாணி, பழச்சாறுகள் என வரும் பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும் வெயிலின் தாக்கம் குறைத்துபசோர்வை போக்க தாகத்திற்கும் பசிக்கும் உணவளித்து மகிழ்ச்சிகளை வெளிப் படுத்தி வருகின்றனர். இந்த செயலை பொது மக்கள் மற்றும் சமூக ஆர்வலர்கள் பாராட்டி வருகின்றனர். திருவிழா முன்னிட்டு அனைத்து சாலை வழி தடங்களிலும், பக்தர்களுக்கும் பொதுமக்களுக்கும், தாகம் தீர.. பசியாற..., நீர், மோர், கலர் பாக்கெட் பழச்சாறுகள் மற்றும் தயிர் சாதம், எலுமிச்சை சாதம், புளி சாதம், காய் சாதம், கீ'ரைஸ், சாம்பார் சாதம், காய்கள் சாதம், பிரியாணி சாதம் உட்பட ஏராளமானோர் ஆங்காங்கே அன்னதானம் வழங்கினர்

கலர் பாக்கெட் ரசாயன ஜூஸ்களால் மக்களுக்கு வயிற்று வலி, தலைவலி வாந்தி மயக்கம் இந்த ரசாயன பாக்கெட்டுகளை, சுகாதாரமற்ற ஐஸ் கட்டிகளை உபயோகப்படுத்துவது போன்றவற்றைகளுக்கு அரசு தடை செய்ய உத்தரவு பிறப்பிக்க வேண்டும்...

இதற்கு பதிலாக மிகவும் ஆரோக்கியமான, கரும்பாலான வல்லம் பானகம், தர்பூசணி ஜூஸ், பப்பாளி ஜூஸ், பல்வேறு பழங்கள் ஜூஸ்கள் மற்றும் முலாம்பழம் ஜூஸ் போன்றவற்றை ஆரோக்யமான உணவு வகைகளை பயன்படுத்த அரசு அனுமதிக்கப்படவும், பொருட்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டியும் கோரிக்கை... உடல் ஆரோக்கியத்திற்கு முன்னுரிமை தந்து உடல் ஆரோக்கியத்திற்கு மாறாக செயல்படுவதை தடுத்து ஆரோக்கியத்திற்கு ஏதுவாகவும் பொது மக்களின் நலன் கருதி உரிய நடவடிக்கை எடுக்க, சம்பந்தப்பட்டத் துறை மற்றும் மாவட்ட ஆட்சியர் உரிய நடவடிக்கை எடுத்து இதனை நடைமுறைப்படுத்த வேண்டுமென விவசாயிகளின் சார்பாகவும், பொதுமக்களின் மற்றும் சமூக ஆர்வலர்களின் சார்பாகவும் கோரிக்கை வைக்கப்படுகின்றனர். பொறுத்திருந்து பார்ப்போம் அரசு ரசாயனத்திற்கு டப்பாங்குத்து போடுகிறதா அல்லது பொது மக்களின் நலன் கருதி ஆரோக்கியத்திற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா மத்திய மாநில அரசுகள் உரிய நடவடிக்கைகள் எடுக்க எதிர்பார்ப்பு.

## மத்திய அரசின் ஜீவன் ரக்ஷா தொடர் விருதிற்கு, தகுதியுடைய நபர்கள்

# வருகின்ற 31.07.2025 ஆம் தேதிக்குள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம்

## மாவட்ட ஆட்சியர் ஆஷா அஜித் தகவல்

சிவகங்கை, மே.17-

சிவகங்கை மாவட்டத்தில் 2025-ஆம் ஆண்டிற்கான வீரதீரச் செயல் புரிந்தவர்களுக்கான மத்திய அரசின் ஜீவன் ரக்ஷா தொடர் விருது வழங்கப்படவுள்ளது.



ஜீவன் ரக்ஷா தொடர் விருதானது, இந்திய அரசின் சார்பில் பல்வேறு நிகழ்வுகளான நீரில் மூழ்கியவரை காப்பாற்றுதல், மின்சார விபத்துகள், தீ விபத்துகள், நிலச்சரிவு, விலங்கின தாக்குதல், சுரங்க மீட்பு நடவடிக்கைகள் ஆகியவற்றில் கடந்த இரண்டு ஆண்டுகளில் (01.10.2023 ஆம் தேதிக்கு பிறகு) ஈடுபட்டு, மனித உயிர்களை மீட்பவர்களுக்கு 3 பிரிவுகளின் கீழ் வழங்கப்படுகிறது. அதில், சர்வோத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கமானது மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை வீரத்துடன் போராடி மீட்பவர்களுக்கும், உத்தம் ஜீவன் ரக்ஷா பதக்கமானது துணிச்சலுடன் தாமதமின்றி செயல்பட்டு மிகவும் அபாயகரமான நிலையில் உள்ளவரை போராடி மீட்பவர்களுக்கும், ஜீவன் ரக்ஷா பதக்கமானது தனக்கு காயம் ஏற்படினும், வீரத்துடன் தாமதமின்றி செயல்பற்று உயிரைக் காப்பாற்றுபவர்களுக்கும் வழங்கப்படுகிறது. மேலும், இவ்விருதிற்கு வயது வரம்பின்றி இருபாலரும் விண்ணப் பிக்கலாம்.

எனவே, தகுதியுடைய நபர்கள் குறிப்பிட்டுள்ள விதிமுறைகளை பின்பற்றி வருகின்ற 31.07.2025 அன்று மாலை 5.00 மணிக்குள், சிவகங்கை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலுள்ள மாவட்ட சமூக நல அலுவலகத்தில் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சயர் ஆஷா அஜித், தெரிவித்துள்ளார்.






■ சிவகங்கை மாவட்டம் மானாமதுரை குட்வில் மேல்நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 493 மார்க் எடுத்து முதலிடத்திலும் 492 மார்க் எடுத்து இரண்டாம் இடத்தையும் 487 மதிப்பெண் எடுத்து மூன்றாம் இடத்தையும் பிடித்துள்ளது இந்த பள்ளியில் 480 மார்க் மேல் 4 பேரும், 450 மார்க் மேல் 21 பேரும் 400 மார்க் மேல் 51 பேரும் மதிப்பெண் எடுத்துள்ளனர். பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் முழு தேர்ச்சி பெற்றுள்ளனர் அவர்களுக்கு பள்ளியின் ஆசிரிய பெருமக்கள் பொதுமக்கள் ஆகியோர் வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டனர்.





# மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளி 100% முழு தேர்ச்சி

மானாமதுரை, மே.17-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை பாபா மெட்ரிக் பள்ளியில் பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் மாணவர்கள் தொடர்ந்து 100% தேர்ச்சி அடைந்துள்ளனர்.

முதல் மதிப்பெண் சோபிகா 487/500 இரண்டாம் மதிப்பெண் ஆகாஷ் 482/500 மூன்றாம் மதிப்பெண் கவியரசு பாண்டியன் 473/500 எடுத்து பள்ளிக்கு பெருமைச் சேர்த்தனர்.

தேர்வு எழுதிய அனைத்து மாணவர்களும் முதல் வகுப்பில் தேர்ச்சி அடைந்துள்ளனர்.

தேர்வில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பள்ளியின் நிறுவனர் அம்மா ராஜேஸ்வரி அவர்கள் பரிசுகள் வழங்கினர்.பள்ளியின் தாளாளர் கபிலன்,பள்ளியின் நிர்வாகி மீனாட்சி,பள்ளியின் முதல்வர் சாரதா மற்றும் ஆசிரியர்கள் அனைவரும் கேக் வெட்டியும், இனிப்புக்களை பகிர்ந்தும் தங்களது வாழ்த்துக்களை மாணவர்களுக்கு தெரிவித்தனர்.முதல் மூன்று இடங்களை பிடித்த மாணவர்களுக்கு பள்ளியின் தாளாளர் கபிலன் பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார்.

# சென்னையில் ஒரே நாளில் 8 விமானங்கள் திடீர் ரத்து

சென்னை, மே.17-

8 விமானங்கள், நேற்று நிர்வாக காரணங்களால் ரத்து செய்யப்பட்டுள்ளதாக விமான நிறுவனங்கள் அறிவித்துள்ளது. திருச்சி, தூத்துக்குடி, மதுரை, சிவமோகா உள்ளிட்ட நகரங்களுக்கு இயக்கப்படும் விமானங்கள் ரத்து. 4 புறப்பாடு விமானங்கள், 4 வருகை விமானங்கள் என மொத்தம் 8 விமானங்கள் திடீரென ரத்தால் பயணிகள் கடும் அவதி. முன்னதாக அறிவிப்பு எதுவும் செய்யப்படாமல், நேற்று திடீரென விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால் பயணிகள் தவித்துள்ளனர்.






# குடியாத்தம் வட்டாரப் போக்குவரத்து துறை சார்பில் தனியார் பள்ளி வாகனங்களில், பள்ளி மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வாகனங்கள் சோதனை

வேலூர், மே.17-

வேலூர் மாவட்டம், குடியாத்தம் தாலுகா, குடியாத்தம் வட்டார போக்குவரத்து துறை சார்பில், திருமகள் அரசு ஆலைக் கல்லூரியில் தனியார் பள்ளிகளின் வாகன தணிக்கை, தனியார் பள்ளிகளின் வாகனங்களை பள்ளி குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் வாகன குறைபாடுகளை குடியாத்தம் கோட்டாட்சியர் சுபலட்சுமி மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் சுந்தர்ராஜன், மோட்டார் ஆய்வாளர் ராஜேஷ் கண்ணா தலைமையில் வாகனங்களை சோதனையிட்டு ஆய்வு மேற்கொண்டனர். இந்த ஆய்வின்போது காவல்துறையினர், தீயணைப்புத் துறையினர், வருவாய்த் துறையினர் மற்றும் பள்ளிக்கல்வி துறை அலுவலர்கள் பணியாளர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

# 10ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகள்: சிவகங்கை மாவட்டம் முதலிடம்

சென்னை, மே.17-

பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி விகிதத்தின்படி, 98.31% பெற்று சிவகங்கை மாவட்டம் முதலிடம் பிடித்துள்ளது. தொடர்ந்து விருதுநகர், தூத்துக்குடி, கன்னியாகுமரி, திருச்சி ஆகிய மாவட்டங்கள் அடுத்த 4 இடங்களைப் பிடித்துள்ளன.

சிவகங்கை 98.31%
விருதுநகர் 97.45%
தூத்துக்குடி 96.76%
கன்னியாகுமரி 96.66%
திருச்சி 96.61%

அரசுப் பள்ளிகளில் அதிக தேர்ச்சி விகிதம் பெற்ற முதல் ஐந்து மாவட்டங்களிலும் சிவகங்கை, விருதுநகர், கன்னியாகுமரி, திருச்சி, தூத்துக்குடி மாவட்டங்கள் முதல் 5 இடங்களைப் பிடித்துள்ளன.

தமிழகத்தில் நடந்து முடிந்த 10ம் வகுப்பு பொதுத் தேர்வு முடிவுகளை சென்னையில் பள்ளிக்கல்வி துறை அமைச்சர் அன்பில் மகேஸ் நேற்று (மே.16) காலை 9 மணியளவில் வெளியிட்டார்.

அதன்படி, 10ம் வகுப்பில் ஒட்டுமொத்தமாக 93.80% பேர் தேர்ச்சி பெற்றுள்ளனர். இதில், மாணவியர் 95.88 சதவீதமும், மாணவர்கள் 91.74 சதவீதமும் தேர்ச்சி அடைந்துள்ளனர். கடந்த ஆண்டைவிட மொத்த தேர்ச்சி விகிதம் 2.25% அதிகரித்துள்ளது. இருப்பினும், வழக்கம்போல் இந்த ஆண்டும் மாணவர்களைவிட மாணவியர் 4.14 சதவீதம் அதிகம் தேர்ச்சி பெற்றுள்ளனர்.

தேர்வெழுதிய 12,290 மாற்றுத் திறனாளி மாணவர்களில் 11,409 பேரும் (92.83%), சிறைவாசிகளில் 237 பேரில் 230 பேரும் (97.05%) பேரும் தேர்ச்சி பெற்றுள்ளனர். மாற்று பாலினத்தைச் சேர்ந்த ஒருவர் தேர்வெழுதினார், அவரும் வெற்றி பெற்றுள்ளார்.

பள்ளிகள் வாரியான தேர்ச்சி விகிதம்: அரசுப் பள்ளிகளில் 91.26%, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 93.63% மற்றும் தனியார் சுயநிதிப் பள்ளிகளில் 97.99% தேர்ச்சி விகிதம் பதிவாகியுள்ளது.

தேர்வு முடிவுகளை https://results.digilocker.gov.in மற்றும் www.tn-results.nic.in http://www.tnresults.nic.in ஆகிய இணையதளங்களில் அறிந்து கொள்ளலாம். மாணவர்கள் தாங்கள் படித்த பள்ளிகள் மூலமாகவும் அறியலாம். பள்ளி மாணவர்கள், தனி தேர்வர்கள் பதிவு செய்த செல்போன் எண்ணுக்கு குறுஞ்செய்தியாகவும் அனுப்பப்படும்.

மாணவர்களின் மதிப்பெண் பட்டியலை www.dge.tn.gov.in எனும் வலைதளத்தில் பள்ளி தலைமை ஆசிரியர்கள் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161